# ECO-COOL™

## குளிர்பதன டெக்னீஷியன்களுக்கான இதழ்

எண்.13

மார்ச் 2005



UNEP உடன் கூடிய ஒப்பந்தத்தின் கீழ் NCCoPPக்காக பிரசுரிக்கப்படுகிறது

## பொருளடக்கம்

தலையங்கம் 1
டீலர் மற்றும் டெக்னீஷியன் பகுதி 1
டீலர்களின் கூட்டங்கள் 2
கருவி ஆதரவுத் திட்டத்தின் தற்போதைய நிலவரம் 2
NCCoPPயின் செய்திச் சிதறல்கள் 2
MAC முன்னோடி பயிற்சி நிகழ்ச்சிகள் 2
செய்தி துணுக்குகள்
- இந்தியாவில் CFC நீக்கம் 3
- புதிய ஓசோன் பாதிப்புகள் 3
தொழில்நுட்ப சாதகங்கள்
தொழிலகங்களிலிருந்து குறிப்புகள் 3
சீல் செய்யப்பட்ட சாதனத்தில் குறைகளைக் கண்டறிதல் 4
பயிற்சி நிறுவனங்கள் 5


ஈக்கோ கூல், தீபக் பாஹ்வா, ஆர்க்டிக் இந்தியா சேல்ஸின் டிரேட்மார்க்கான இது உரிமத்தின் கீழ் பயன்படுத்தப்படுகிறது.

## தலையங்கம்

தேசிய CFC பயனீட்டை வெளியேற்று திட்டம் (NCCoPP) புதிய வாசகர்களை வரவேற்பதோடு, 4 வருடங்களாக ஆர்வத்துடன் இந்த இதழை வாங்கியும் கருத்துகளைப் பரிமாறி கொண்டும் இருக்கிற தற்போதுள்ள வாசகர்களுக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறது. இந்தப் புதிய இதழ் NCCoPPயின் கீழ் UNEP விழிப்புணர்வுத் திட்டம் பிரிவின் ஒத்துழைப்புடன் இயங்குவதால் சில மாற்றங்களை உள்ளடக்கியுள்ளது. வீடுகளுக்கான சிறிய ரெஃபிரிஜிரேஷனை சர்வீஸ் செய்வதைத் தவிர்த்து இத்திட்டமானது தற்போது கார் ஏர்கண்டிஷனிங் மற்றும் திறந்த நிலை கம்ப்ரசர்கள் ஆகியவற்றை சர்வீஸ் செய்யும் நோக்கைக் கொண்டுள்ளது. இந்தியன் ரயில்வே போன்ற மிகப்பெரிய நிறுவனங்களுக்குக் கூட அதன் சேவையை இது விரிவுபடுத்த உள்ளது. சர்வீஸ் டெக்னீஷியன்-களுக்குத் தேவையான தகவல்களை அளிப்பதை நோக்கமாகக் கொண்டிருக்கிறது ஈக்கோ கூல். மாற்றுமுறை ரெஃப்ரிஜிரென்டுகளை உபயோகித்து சாதனங்களை சர்வீஸ் செய்வதிலான உங்களது அனுபவங்களை எங்களுடன் பகிர்ந்து கொள்ள நாங்கள் ஆவலுடன் எதிர்பார்க்கிறோம். இதற்கு எங்களது தொழில்நுட்ப ஆலோசகர்கள் தீர்வுகளைத் திறம்பட அளிப்பார்கள். இத்திட்ட நடவடிக்கைகள் துவங்கிவிட்டன. எங்களது பல டெக்னீஷியன்கள் இத்திட்டத்தில் துடிப்புடன் செயலாற்றத் தயாராக உள்ளனர். மார்ச் இறுதி வரை 1615 டெக்னீஷியன்களுக்கு 65 திட்ட நிகழ்ச்சிகள் வழங்கப்பட்டுள்ளன. இக்காலத்திற்கான பயிற்சி நிகழ்ச்சிகள் முடிவு பெறும் நிலையில் உள்ளன. பயிற்சி தேவைப்படும் டெக்னீஷியன்கள் அவர்களது பகுதி பயிற்சி அமைப்பாளர்களையோ அல்லது மண்டல மேலாண்மை நிறுவனத்தையோ அணுகலாம். போதுமான ஆர்வலர்கள் இருப்பின் அதாவது, 24 டெக்னிஷியன்கள் மற்றும் நிதிவசதி இருந்தால் நிகழ்ச்சிகள் தொடங்கப் பெறும்..

NCCoPPயில் இடம் பெற்ற சில முக்கிய நிகழ்ச்சிகளுக்கான அறிவிப்புகளை நாங்கள் இதில் உள்ளடக்கியுள்ளோம். இத்துறையைச் சார்ந்த தொழில்நுட்பத் தகவல்களையும், இந்தியாவின் சாதன தயாரிப்புத் தொழிலகங்களின் ஒன்றில் பல வருடங்களாகப் பயிற்சி ஒருங்கிணைப்பாளராக சீல் செய்யப்பட்ட சாதனங்களில் பழுதுகளைக் கண்டறிவதில் பயிற்சி அளித்தற்கான கட்டுரைகளையும் நாங்கள் வழங்க உள்ளோம். மேலும் கம்பரசர்களைத் தேர்வு செய்வதிலான கம்ப்ரசர் தொழிலகங்களின் ஆலோசனைகளையும் வழங்க உள்ளோம்..

இந்தியாவில் CFCக்களை நீக்குவதிலான வழிமுறைகளானது பல நிகழ்ச்சிகள் மற்றும் திட்டங்கள் ஆகியவற்றால் உத்வேகம் பெற்றுக் கொண்டிருக்கிறது. சுங்க இலாகா அதிகாரிகளுக்கு அளிக்கப்பட்டப் பயிற்சித் திட்டங்கள் மற்றும் மொபைல் ஏர்கண்டிஷனிங் (MAC) துறையினருக்கு அளிக்கப்பட்ட சிறந்த சர்வீஸிங் வழிமுறைகளுக்கான பயிற்சி அரங்கம் ஆகியவற்றைப் பற்றிய தகவல்களையும் வழங்க உள்ளோம். இப்பயிற்சிகளில் 29 டெக்னீஷியன்கள் பயிற்சியைப் பெற்றனர். இந்தியாவின் RAC சர்வீஸ் துறையினருக்கு



அளிக்கப்பட்ட "CFCயை நீக்குவதிலான சவால்களை சந்திப்பது" குறித்த மாநாட்டைப் பற்றிய தகவல்களையும் அளித்துள்ளோம். இம்மாநாட்டில் ஹைடுகோரின் வெற்றிக்குக் காரணமான இணை நிறுவனர்கள் டெல்லியில் கூடி NCCoPPயின் நடவடிக்கைளுக்கும் வழிகாட்ட உறுதியளித்தனர். இது போன்ற வெற்றிகளில் NCCoPP விழிப்புணர்வு இயக்கக் குழு 3 பத்திரிகைக் கூட்டங்களை நடத்தி அதன் மூலம் ஆங்கில நாளிதழ்கள் மற்றும் இந்தியாவின் உள்ளூர் நாளிதழ்களில் 30 கட்டுரைகளை வெளியிட்டதைக் குறிப்பிடலாம். இந்தக் கட்டுரைகளை நீங்கள் படித்திருக்கலாம். இது குறித்து உங்களுடைய கருத்துக்கள், வினாக்கள் மற்றும் ஆலோசனைகளை அறிய ஆவலாக உள்ளோம். ஏனெனில், இது போன்ற கருத்துக்கள் தாம் இந்த நியூஸ் லெட்டர் திறம்பட செயல்பட வழிவகுக்கும்.

இந்த நியூஸ் லெட்டர் UNEP உடன் கூடிய விழிப்புணர்வு ஒப்பந்தத்தின் கீழ் IT பவர் இந்தியாவினால் பிரசுரிக்கப்படுகிறது. இது போன்ற பல நடவடிக்கைகள் மற்றும் நிகழ்ச்சிகள் ஆகியவை அடுத்த சில மாதங்களில் நடைமுறைபடுத்தப்பட்டு இவற்றின் மூலம் இந்தியாவிலிருந்து CFCஐ வெளியேற்றம் செய்வது குறித்த முக்கிய தகவல்கள் சர்வீஸிங் துறைக்குத் தெரிவிக்கப்படும் (இதில் டீலர்கள் மற்றும் கருவி ஆதரவு திட்டப் பயிலரங்கங்கள் மற்றும் பத்திரிகையாளர் கூட்டம், போஸ்டர் மற்றும் கையேடுகள் ஆகியவையும் அடங்கும்). இதுமட்டுமின்றி சரியில்லாத, முறையற்ற சர்வீஸிங் வழிமுறைகள் மூலம் சர்வீஸ் செய்யும் டெக்னீஷியன்களுக்குச் சரியான முறையில் பயிற்சியளித்து CFC வெளியேற்றம் குறித்து அரசாங்கம், தேசிய, மாநில மற்றும் தனியார் நிறுவனங்கள் மற்றும் தனி நபர்கள் எடுக்கும் செயல்பாடுகளுக்கு ஒத்துழைப்பு அளிப்பதற்கான வீடியோவும் தயாரிக்கப்படுகிறது.

மேலும் பல புதிய தகவல்களுக்கு www.nccopp.info என்ற NCCoPPயின் இணையதளத்தை அணுகலாம் அல்லது nccopp@itpi.co.in அல்லது tpm@itpi.co.in என்ற முகவரியிலும் அணுகலாம்.

## டீலர்கள் மற்றும் டெக்னீஷியன்களுக்கான பகுதி



அன்பார்ந்த ஆசிரியர் அவர்களுக்கு,

நான் ஏர்கண்டிஷனிங் மற்றும் ரெஃப்ரிஜிரேஷன் உதிரி பாகங்களை வர்த்தகம் செய்கிறேன். உங்கள் ஈக்கோகூல் இதழ் மூலம் நீங்கள் தவறாது மேற்கொள்ளும் நடவடிக்கைகளை நான் அறிவேன். உங்கள் குழு மிகச் சிறப்பாக செயல்பட்டமைக்கு எனது பாராட்டுகளையும் இனி வருங்காலத்தில் பல வெற்றிகளைக் குவிக்க வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.


உங்கள் நடவடிக்கைகளுக்கு எவ்விதம் வலுவூட்டி உத்வேகம் அளிக்கலாம் என்ற எண்ணம் எப்போதும் எனக்கு உள்ளது.

மொத்த வர்த்தகர் → சில்லறை விற்பனையாளர் → மெக்கானிக் → நுகர்வோர் என்ற இந்த இணைப்பானது இந்திய வர்த்தகத் துறைக்கு உரிய தனித்துவமான இணைப்பாகும். ஒரு மொத்த வியாபாரி, 20 சில்லறை விற்பனையாளர்களையும், ஒவ்வொரு சில்லறை விற்பனையாளரும், 100 வெவ்வேறு மெக்கானிக்குகளையும் கொண்டிருப்பார்கள்.

ஒசோன் படலத்தைச் சிதைக்கும் பல பொருட்கள், சூழல் மற்றும் தீர்வுகள் ஆகியவற்றைக் குறித்த விழிப்புணர்வை அனைவருக்கும் ஏற்படுத்த சில்லறை விற்பனையாளர்களை இணை நிறுவனர்களாகக் கொண்டிருக்கும் ஒரு வழிமுறையை நான் முன்வைக்கிறேன். இவ்விதம் நாம் தகவலைப் பரப்ப பல வழிகள் இருப்பதோடு 20 நபர்களை ஒருங்கிணைப்பதன் மூலம் நாம் 2000 மெக்கானிக்குகளைச் சென்றடையலாம்.

ஆக சில்லறை விற்பனையாளர்கள் நமது சிறப்புப் பிரதிநிதிகளாக ஆவதோடல்லாமல் NCCoPP மற்றும் மெக்கானிக்குகள் மற்றும் நுகர்வோர்கள் ஆகியவர்களுக்கிடையில் ஒரு பாலமாகவும் செயல்படுவார்கள். இந்தத் தகவல் பரிமாற்றமானது இரு விதத்தில் செயல்படும். ஒன்று, மெக்கானிக்குகளுக்கு இத்திட்டம் குறித்த தகவல்களை அறிவிக்கும். மற்றது, மெக்கானிக்குகள் மற்றும் நுகர்வோர்களின் தேவைகளைத் திட்டநிர்வாகத்திற்கு எடுத்துரைக்கும்.

இந்த வழிமுறைக்குப் போதுமான உற்சாகம் அளிக்கப்பட்டால் இது ஒரு வெற்றிகரமான ஒன்றாக அமையும். உற்பத்தியாளர் மற்றும் நுகர்வோர் ஆகியோருக்கிடையே ஒரே பாலமாக விளங்கும் நடுத்தரப் பிரிவு சில்லறை விற்பனையாளரை விட நன்கு அறிந்தவர்கள் மற்றும் பொதுமக்களிடையே தகவலைப் பரிமாற்றம் செய்வதுதான் இதன் முக்கியக் குறிக்கோள். இந்த முக்கிய இணைப்பை மிகத் திறம்பட பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.



**திரு. ஆஷிஷ் குப்தா, உதிரி பாகங்கள் மற்றும் ரெப்ரிஜிரெண்ட் டீலர், ஸ்டாண்டர்ட் ரெப்ரிஜிரேஷன் - எலெக்ட்ரிகல் இன்ஜினியரிங், 3732, என்.எஸ் மார்க், தர்யாகன்ஜ், புது தில்லி - 110 002.**

## உங்கள் எண்ணக்குவியல்

அன்புள்ள ஐயா,

உங்கள் ஈக்கோ கூல் நியூஸ் லெட்டரின் முதல் இதழை நான் பெற்றுள்ளேன். இது எனக்கு மிகவும் மகிழ்ச்சியளிக்கிறது. நான் RAC துறையில் கடந்த 7 வருடங்களாக பணிபுரிகிறேன். இருப்பினும், உங்கள் இதழைப் படித்த பின்னர், மேலும், CPC-ஐ குறைக்க வேண்டும் என்பதிலான பயிற்சியைப் பெற்ற பின்னரும்தான் இந்த விதத்தில் வெற்றிகரமாக செயல்பட ஆரம்பித்தேன். உங்கள் இதழைப் படித்ததிலிருந்து என்னுள்ளே எழுந்த சில வினாக்களை உங்கள் முன் வைக்கிறேன். இதனால், மற்ற RAC டெக்னீஷியன்கள் இது போன்ற பிரச்சினைகளை தவிர்க்கலாம்.

- நான் 134A டீப் ஃப்ரீஸரை கேஸினால் சார்ஜ் செய்தேன். இந்தச் சாதனத்தில் ஏற்கனவே இருந்த 134A கசியத் தொடங்கியது. நான் இதைப் பழுது பார்க்கும் போது, உள்ளே உள்ள POE ஆயில் மாசுப்பட்டிருந்தால் அதை நீக்கிவிட்டு மற்ற புதிய ஒன்றை மாற்றினேன். இன்னமும் ப்ளாக் மோட்டாரில் 10 கிராம் அல்லது அதற்கு மேற்பட்ட மாசுபட்ட ஆயில் இருக்கவேண்டும் என நினைக்கிறேன்
- இப்போது இந்த மாசுபட்ட ஆயிலும் புதிய ஆயிலும் சேர்த்து சாதனத்திற்கு பிரச்சினைகளை ஏற்படுத்துமா?
- எவ்விதம் மாசுபட்ட POE ஆயிலிலிருந்து சீல் கம்ப்ரசரை விலக்கலாம்.

நான் மேற்கண்ட வினாக்களுக்கான பதில்களை உங்களிடமிருந்து எதிர்நோக்கியுள்ளேன். அதே சமயம் எனது நல்வாழ்த்துக்களைக் கூறிக்கொண்டு, நியூஸ் லெட்டரை எனக்கு அனுப்பியதற்காக எனது நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**முஷ்டக் அலி, ஷீத்தல் ரெஃபிரிஜிரேஷன், பிரதான சாலை, நல் சஹாப்புரா, வாஷிம், மஹாராஷ்டிரா.**

ஈக்கோகூலின் பதில்: திரு. முஷ்டக் அலியின் வருத்தத்திற்குத் தகுந்த ஆதாரம் உள்ளது. புதிதாக கம்ப்ரசர் ஒன்றை கம்ப்ரசர் தயாரிப்பாளரைக் கொண்டு ஆயிலை சார்ஜ் செய்து பொருத்துவது சிறந்தது. இது விலை அதிகமானதால் மெக்கானிக்குகள் இதை தவிர்த்து விடுகிறார்கள். பழைய கம்பரசரின் உள்ளே சிறிதளவு ஆயில் இருப்பதனால் அது சாதனத்தை மாசுபடுத்துவதுடன் அதிலுள்ள ஈரப்பதத்தை உறிஞ்சக்கூடிய சாத்தியக் கூறுகள் உள்ளன. சாதனத்தின் பிற பாகங்களில் தங்கியிருக்கும் ஆயில் முழுவதையும் நைட்ரஜன் மூலம் வெளியேற்றுவதை அவர் உறுதி செய்யவேண்டும். இதற்கு புதிய ஃபில்டர் டிரையரை உபயோகப்படுத்துவது கூடுதல் பாதுகாப்பினைத் தரும்.

**தொடர்பு கொள்ளவும் : திரு.** R.S. **ஐயர்,** iyerus@vsnl.com




CFCS WILL NO LONGER BE AVAILABLE IN INDIA FROM JANUARY 2010. CFCS WILL NO LONGER BE AVAILABLE IN INDIA FROM JANUARY 2010.

# டீலர் கூட்டங்கள்

டீலர்களை வரவழைத்து அவர்களுடன் தொழில்நுட்ப, சுற்றுச்சூழல் மற்றும் கூட்டுமுயற்சி விஷயங்களை விவாதிப்பதற்கென இத்திட்டத்தின் கீழ் டீலர் கூட்டங்கள் சண்டிகர், ஜெய்பூர், இந்தூர், லக்னோ, கொச்சி, பீஹார், புவனேஸ்வர் மற்றும் டேராடூன் ஆகிய இடங்களில் நடைபெற்றன. இக்கூட்டங்கள் இரவு விருந்துடனும் திட்ட உறுப்பினர்களிடையே கருத்துப் பரிமாற்றங்களோடும் நிகழ்த்தப்பட்டன.

இது போன்ற கடைசிக் கூட்டமானது 20 மார்ச் 2005 அன்று குவஹாத்தியில் நடைபெற உள்ளது. NCCoPPயில் முழுதும் பங்கேற்பதற்காக இக்கூட்டத்திற்கு 7 வடகிழக்கு மாநிலங்களிலிருந்து டீலர்களும் பூடான் நாட்டிலிருந்து ஒரு சிறப்பு விருந்தினர் அந்தஸ்த்தில் ஒரு டீலரும் வரவழைக்கப்படுகின்றனர். அவர்கள் இதை அவர்களுடைய வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்படும் பயிற்சியை மேம்படுத்துவதன் மூலமும், சுற்றுசூழலுக்கேற்ற தயாரிப்புகளை (HFC 134a மற்றும் இந்தியாவில் தற்போது கிடைக்கும் ஹைட்ரோ கார்பன் ப்ளெண்டுகள் போன்ற மாற்றுமுறை ரெ·ஃபிரிஜெரண்டுகள் உட்பட) விற்பதன் மூலமும் மற்றும் உள்ளூர் நிர்வாக பிரதிநிதி அமைப்பில் (SISI அல்லது மாசுக்கட்டுப்பாடு வாரியம்) CFCஐ விற்பதற்காகப் பதிவு செய்வதன் மூலமும் செய்யலாம். இதுவரை 353 டீலர்கள் இந்தக் கூட்டங்களில் பங்கேற்று இந்தியாவிலிருந்து CFCஐ வெளியேற்றுவதற்கான முக்கிய தகவல்களைப் பரப்பி வருகிறார்கள். இந்த டீலர்களுக்குக் கூடிய விரைவில் NCCoPP இணைய தளத்தில் தனிப் பக்கம் வழங்கப்பட்டு அதன் மூலம் அவர்கள் தகவல்களை அணுகவும் டவுன்லோடு செய்யவும் மற்றும் அவர்கள் மாநிலத்தில் நடைபெறும் கூட்டங்களைப் பற்றி அறிந்து கொள்ளவும் வசதி ஏற்பட உள்ளது. மேலும் விபரங்களை nccopp@itpi.co.in என்ற இணையதளத்தை அணுகியோ அல்லது ஈக்கோகூல் ஆசிரியருக்குக் கடிதம் எழுதியோ அல்லது உள்ளூர்ப் பயிற்சி மைய அமைப்பாளர்களிடமிருந்தோ நேரடியாகப் பெற்றுக் கொள்ளலாம். (விவரங்கள் 5 & 6வது பக்கங்களில் உள்ளன).

**மிகச் சிறந்த வழிமுறைகளுக்கான போஸ்டர் 30 ஜனவரி 2005 அன்று லக்னோ டீலர்கள் கூட்டத்தில் அறிமுகப்படுத்தப்பட்டது.**




**போஸ்டரைப் பெற விரும்பும் டீலர்கள் மற்றும் RAC சர்வீஸிங் நிறுவனங்கள் ஈக்கோகூல் ஆசிரியருக்கு எழுதிப் பெறலாம்.**

# கருவி ஆதரவு திட்டத்தின் மீதான தற்போதைய நிலவரம்

கருவி ஆதரவு திட்டத்தை மேம்படுத்துவதற்கான பயிலரங்கங்கள் சென்னையில் 5 நவம்பர் 2004லும் பெங்களூரில் 7 நவம்பர் 2004லும் ஹைதராபாத் 8 நவம்பர் 2004லும் இடம் பெற்றன. இந்த வர்த்தகத்தில் நேரடிப் பேச்சு வார்த்தைக்குப் பிறகு புதிய RSEக்களின் தேவைகள் அறியப்பட்டன. EOIக்கள் மேலும் பெறப்பட்டு பட்டியல் வரையறுக்கப்பட்டன. 341 EOIக்கள் சரிபார்க்கப்பட்டு, தேவையான அளவைகள் பொருந்துகின்றனவா என்று பரிசோதித்தப் பின்னர் UNDP ஏஜென்சிக்கு அவை அனுப்பப்பட்டன. RSEக்களின் ஆர்வத்தின் மீதான முடிவுகள் அவர்களுக்கு மார்ச் மாதத்திற்கு முன்னர் தெரிவிக்கப்படும்.

# NCCoPPயின் செய்தி சிதறல்கள்

## இந்தியாவில் RAC சர்வீஸ் துறையிலிருந்து CFCஐ வெளியேற்றுவதிலான சவால்களை சந்திப்பது குறித்த மாநாடு

இந்தியா ஹேபிடட் மையம், புது தில்லியில் 9 மார்ச் 2005 அன்று நடைபெற்ற மாநாட்டில் ஹைடுகோர் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதிலான அனுபவங்களைப் பகிர்ந்து கொள்வது மற்றும் NCCoPPயின் அதிகாரபூர்வமான துவக்கம் ஆகியவை முக்கிய நோக்கமாக இருந்தன. ஹைடுகோரிற்கான நிதியாதரவும் வழிகாட்டுதலும் இந்திய மற்றும் சுவிட்சர்லாந்து அரசாங்கங்களால் வழங்கப்பட்டன. அதே சமயம், NCCoPPயிற்கான நிதியாதரவு மான்ட்ரியல் ஒப்பந்தத்தின் பன்முக நிதியம் மற்றும் இந்திய, சுவிட்சர்லாந்து மற்றும் ஜெர்மனி அரசாங்கங்களின் இரு தரப்பு ஆதரவினால் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. UNDP, UNEP மற்றும் UNIDO ஆகியவற்றின் பிரதிநிதிகளும் இப்புதிய திட்டத்திற்கு பங்களித்துள்ளனர். இம்மாநாடானது மாண்புமிகு இந்திய அரசின் சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அமைச்சரான திரு.ஏ. ராஜா அவர்களால் துவக்கிவைக்கப்பட்டது. திரு ஜூலியஸ் ஜார்ஜ் லூய், அமைச்சர், ஜெர்மனி தூதரகம் மற்றும் ஒலோ·ஃப் ஜெல்சன், அமைச்சர் மற்றும் இணை தூதரக தலைவர், சுவிட்சர்லாந்து தூதரகம் ஆகியோரும் இந்தியாவிலிருந்து CFCஐ நீக்குவதற்கான முனைப்பையும் ஈடுபாட்டையும் அவர்களது அரசாங்கங்கள் சார்பில் வெளியிட்டனர். ரெ·ஃபிரிஜிரேஷன் தொழில்துறை, சர்வதேச ஏஜென்சிக்கள் மற்றும் தேசிய நிறுவனங்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகள் வெற்றிகரமான ஹைடுகோர் திட்டத்தில் தங்களுக்கு ஏற்பட்ட அனுபவங்களைக் கூறினார்கள். மேலும், NCCoPPயின் இலக்குகளை அடைவதற்கான வழிகளைக் குறிப்பிட்டுக் காட்டினர். ஓசோன் மையத்தின் புதிய இயக்குநரான Dr.A. துரைசாமி அவர்களின் முயற்சியால் RAC சர்வீஸ் ஓசோன் துறைகளிலிருந்து CFCஐ வெளியேற்றும் செயலாக்கத்தில் உள்ளவர்கள் உட்பட 170 பேர் பங்கேற்றனர். இந்த நிகழ்ச்சியை வழி நடத்துவதற்கான திட்டம் SDCஐச் சேர்ந்த Dr. வீணா ஜோஷி அவர்களால் அளிக்கப்பட்டது. இக்கூட்டத்தின் முதல் பாதியில் 14 பயிற்சி மையங்களின் அமைப்பாளர்கள் தங்களது பயிற்சி நிகழ்ச்சிகளின் அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளும் கலந்துரையாடல் நடைபெற்றது. இந்த ஆக்கபூர்வமான கலந்துரையாடலானது எவ்விதம் பயிற்சி நிகழ்ச்சிகளை மேம்படுத்தலாம் என்றும் டிசம்பர் 2009க்குள் இந்தியாவிலிருந்து CFCஐ நீக்க வேண்டும் என்ற அரசாங்கத்தின் கெடுவினைச் சந்திக்க எவ்விதத்தில் அதிக அளவில் டெக்னிஷியன்களைப் பயிற்சிக்கு அமர்த்தலாம் என்ற விதத்திலும் அமைந்தது.




மாண்புமிகு இந்திய அரசின் சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அமைச்சர் திரு.ஏ. ராஜா மாநாட்டைத் துவக்கி வைத்தார்




*NCCoPP Project Partners*



 CFCS WILL NO LONGER BE AVAILABLE IN INDIA FROM JANUARY 2010.

# MAC முன்னோடி பயிற்சித் திட்டம்




நல்ல சர்வீஸிங் வழிமுறைகள் மற்றும் HFC 134a மற்றும் HC ரெப்ரிஜிரெண்டுகள் கொண்டு மொபைல் ஏர் கண்டிஷனிங் சாதனங்களை ரெட்ரோஃபிட்டிங் செய்வது ஆகியவற்றிற்கான முன்னோடிப் பயிற்சி பயிலரங்கமானது சமீபத்தில் பெங்களூரில் ட்யூ பாயிண்ட் அப்ளையன்சில் நடைபெற்றது. இந்தப் பயிலரங்கம் 2 வெவ்வேறு நாட்களில் நடைபெற்றது. இதில் 29 பேர்கள் பங்கேற்றனர். தியரி வகுப்புகள் காலையிலும் பிராக்டிகல் வகுப்புகள் மதியமும் இடம் பெற்றன. பெங்களூரிலிருந்து முறைசார் மற்றும் முறை சாராத பயிலரங்கங்கள் மூலம் நேரடியாக தருவிக்கப்பட்ட பங்கேற்பாளர்கள் தற்போது மொபைல் ஏர்கண்டிஷனிங் சாதனங்களை நிறுவி சர்வீஸ் செய்து வருகின்றனர். இத்துறையில் இவர்கள் கடந்த 5 முதல் 20 வருடங்களாக இச்சேவையை செய்து வருகின்றனர். NCCoPPன் கீழ் நடைபெறும் முதல் பயிலரங்கம் இதுவே. பங்கேற்பாளர்களின் கருத்துக்களின் அடிப்படையில் இந்நிகழ்ச்சியானது மீண்டும் நடத்தப்படும். ஹைசில் மைனஸ் 30 போன்ற ஹைட்ரோ கார்பன்களைப் பயன்படுத்தவதில் சில டெக்னீஷியன்களுக்கு இருந்த சந்தேகங்கள் தீர்க்கப்பட்டன. இச் சந்தேகங்களை அவற்றைச் சுலபமாகப் பயன்படுத்துவதன் மூலமும் மிகக் குறைந்த விலையிலான ரெட்ரோஃபிட்டிங் மூலமும் சரிசெய்து விடலாம் என்று விளக்கப்பட்டது. HFC 134a பயன்படுத்துவதிலும் மற்றும் சாதனத்தின் சில பாகங்களில் மாற்றங்களைச் செய்வதிலும் மிகுந்த கவனத்துடன் செயல்படவேண்டும். இந்தப் பயிலரங்கத்தை முன்னின்று நடத்தியவர்கள் பேராசிரியர் அகர்வால், IIT தில்லி, திரு. R.S. ஐயர் மற்றும் திரு. C.J. மேத்யூ, ட்யூ பாயிண்ட் அப்ளையன்சஸ் ஆகியோர் பயிற்சிக்கான உபகரணங்களையும் இவர்களே தயார் செய்துள்ளனர். பெங்களூர் பகுதியில் கிட்டதட்ட 100-200 டெக்னீஷியன்கள் தற்போது மொபைல் ஏர் கண்டிஷனில் சிஸ்டங்களை சர்வீஸ் செய்து வருகின்றனர் என்றும் கூடிய விரைவில் இது அதிகரிக்கும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

**தொடர்பு கொள்ளவும் : திரு.** C.J. **மேத்யூ, ட்யூ பாயிண்ட் அப்ளையன்சஸ்,** cjmathew@vsnl.com

# இந்தியாவில் CFCயின் வெளியேற்றம் குறித்த செய்தி துணுக்குகள்



வெளிநாட்டு வர்த்தத் தலைமை இயக்ககம், கடலோரக் காவல்படை மற்றும் சுங்க இலாகா, மற்றும் பூடானிலிருந்தும் வந்த அதிகாரிகள் ஆகியோருக்கான பயிற்சியாளர்களுக்குப் பயிற்சியளிக்கும் நிகழ்ச்சி 17 மற்றும் 18 பிப்ரவரி 2005 ஆகிய நாட்களில் நேஷனல் அகாடமி ஆஃப் கஸ்டம்ஸ், எக்ஸைஸ் & நார்கோடிக்ஸ் (NACEN) என்ற இடத்தில் நடைபெற்றது. இந்த இரண்டு நாள் நிகழ்ச்சியில் ஓசோனை சிதைய வைக்கும் பொருட்கள் ஏற்படுத்தும் கேடுகள், ODSஐ பயன்படுத்துதல் மற்றும் வர்த்தகம் செய்வதை சர்வதேசஅளவில் மேற்கொள்ளும் மான்ட்ரியல் ஒப்பந்தம், இப்படிப்பட்ட பொருட்களை கூட்டத்திற்குப் புறம்பாக வர்த்தகம் செய்யும் வகைகள், போக்கு மற்றும் இவற்றின் மீதான நடவடிக்கை ஆகியவை விவாதிக்கப்பட்டன. மாநிலங்கள் மற்றும் அதன் எல்லைகளுக்குட்பட்டு ODS செயல்பாட்டினை ஒழுங்குபடுத்துவதில் சுங்க இலாகா அதிகாரிகள் மற்றும் அரசாங்க ஏஜென்சிகள் ஆகியோரின் பங்கினையும் இந்நிகழ்ச்சி எடுத்துரைத்தது. CFCஐ கண்டறிவதற்கான உபகரணங்கள் மீது அதிகாரிகளுக்குப் பயிற்சியளிக்கப்பட்டது. இந்த உபகரணம் இந்தியாவில் சில மாதங்களில் அறிமுகப்படுத்தவுள்ளது.

**தொடர்பு கொள்ளவும் : திரு.** V.K. **சிங் குஷ்வா, கூடுதல் தலைமை இயக்குநர்** NACEN, **ஈமெயில்** : adgnacen@yahoo.com

# செய்தித் துணுக்கு - ஆர்க்டிக் பகுதியில் புதிய ஓசோன் சிதைவுகள்

ஆர்க்டிக் பிரதேசத்தில் இந்தக் குளிர்காலத்தில் புதிதாக ஓசோன் சிதைவு கண்டறியப்பட்டுள்ளது. இது போன்ற குளிர் நிலைகள் நீடித்தால் மிகப் பெரிய அளவில் ஓசோன் சிதைவு உண்டாகும் என எதிர்பார்க்கப்படுகிறது. கடந்த 2 மாதங்களாக குறைந்த அளவிலான வெப்பத்துடன் இருந்த ஓசோன் படலம் கடந்த 50 வருடங்களாக ஒட்டுமொத்த அளவில் வெப்பம் குறைவாகவே இருந்துள்ளது. கடந்த நவம்பர் முதல் மிகப்பெரிய துருவ ஸ்ட்ரோஸ்கோபிக் மேகங்கள் ஆர்கடிக் பகுதியின் 20 கிமீ. உயரத்தில் உள்ள ஓசோன் படலத்தில் மீது இருந்தது. இது கடந்த 20 வருடங்களில் மிகப் பெரியது ஆகும்.

மேலும் விவரங்களுக்கு http://www.ozone-sec.ch.cam.ac.uk/scout_o3/ என்ற இணைய தளத்தை அணுகவும்.



# தொழிலகங்களிலிருந்து தொழில்நுட்பக் குறிப்புகளைப் பெறுதல்

மாடல் கம்ப்ரசரானது ஒரு ரெஃபிரிஜிரேட்டர், ஐஸ்க்ரீம் ஸ்டோரேஜ் கேபினெட், விஞ்ஞான குளிர்பதன சாதனம் ஆகியவற்றிற்குப் பயன்படுகிறது. ஏனெனில், இவற்றின் ஆப்பரேட்டிங் பிரஷர்கள் வெவ்வேறாக இருப்பதுதான் இதற்குக் காரணம். தயாரிப்பாளர்கள் பிரசுரிக்கும் பெயரளவிலான HPயானது கம்ப்ரசர் தேர்விற்கு உபயோகப்படுவதில்லை.

**கம்ப்ரசர் HP - ஒரு தவறான எண்ணம்**

HP (ஹார்ஸ் பவர்)ன் அடிப்படையில் கம்ப்ரசரை தேர்ந்தெடுப்பது ரெஃப்ரிஜிரேட்டருக்கு பாதிப்பு ஏற்படுத்தும். ஒரு கம்ப்ரசர் மோட்டாரின் ஹார்ஸ் பவர் என்பது ஒரு குறிப்பிட்ட இயக்க நிலைகளில் மோட்டார் வெளியிடும் சக்தியாகும். கம்ப்ரசர்கள் வெவ்வேறு பயன்பாடுகளுக்கு ஏற்ற வகையிலும் பரவலான எவாபரேடிங் வெப்பநிலைகளுக்கு ஏற்றவாறும் வடிவமைக்கப்படுகின்றன. உதாரணமாக, (-) 28.9°C முதல் (-) 6.7°C வரை எவாபரேடிங் டெம்பரச்சரில் இயங்கக் கூடிய வகையில் வடிவமைக்கப்பட்ட ஒரு லோ டெம்பரேச்சர் ஸ்டாண்டர்ட் ரேட்டிங் நிலைகளில் (IS 10617 பகுதி-I) கம்ப்ரசரின் குளிரூட்டும் திறனை சரிபார்த்து கம்பரசரை வாங்குவதுதான் சரியானது. இதற்கு மேலும் ஒரு உதாரணத்தைக் கூறி விளக்குகிறோம்.

ஒரு சிங்கிள் டோர், 165லி ரெப்ரிஜிரேட்டருக்கு தோராயமாக 90 வாட்ஸ் (300 Btu/hr) குளிரூட்டும் திறன் தேவைப்படுகிறது. இந்த கம்பரசர் சில டெக்னீஷியன்களால் 1/7 HP என்றும் மற்றவர்களால் 1/6 HP என்றும் அவற்றின் தயாரிப்பு, மாடல் ஆகியவற்றை வைத்துத் தீர்மானிக்கப்படுகிறது. கம்ப்ரசரை HP மூலம் குறிக்கும் போது, ஒரு டெக்னீஷியன் 165 லிட்டர் ரெஃப்ரிஜிரேட்டருக்கு 1/6 HPஐ கேட்டால் அவருக்கு அதிக திறனுடைய அதாவது 105 வாட்ஸ் (360 Btu/hr) திறன் கொண்ட கம்ப்ரசர் வழங்கப்படும் சாத்தியகூறுகள் உள்ளன. ஏனெனில், டீலர்கள்/வர்த்தகர்கள் கம்ப்ரசர் மாடலில் தரப்பட்டுள்ள விபரங்களின் அடிப்படையில் செயல்படுகிறார்கள். குறைவான திறன் கொண்ட சாதனத்தில் அதிக திறன் கம்பரசரை பயன்படுத்துவதால் சாதனத்தின் இயக்க நிலைகளில் சீரற்ற தன்மை ஏற்படுவதோடு மின்சார பயனீட்டளவும் அதிகரிக்கிறது.

அதுமட்டுமல்ல, ஒரு டெக்னீஷியன் HPஐ குறிப்பது மூலம் உயர்திறன் கம்ப்ரசருக்கு அதிக விலையையும் தருகிறார் என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். இன்றைய அளவில் ரெப்ரிஜிரேட்டர்களில் பயன்படுத்துவதற்காக 15 முதல் 30 வாட்ஸ் (50 முதல் 100 Btu/hr) என்ற அதிகரிக்கும் திறன் அளவுகளில் பல மாடல் கம்ப்ரசர்கள் தயாரிக்கப்படுகின்றன.

1. குறைவான விலை, 2. குறைவான திறன் பயனீட்டளவு மற்றும் 3. வாடிக்கையாளரின் உத்தரவாத காலத்தில் குறைவான சர்வீஸ் கால்கள் ஆகியவற்றைப் பெற ரெஃப்ரிஜிரேட்டர் மாடல் கம்ப்ரசரை அதன் குளிரூட்டும் திறனின் அடிப்படையில் தேர்வு செய்யவேண்டும்.

தொடர்பு கொள்ளவும் : திரு. K. ராகவன், மேலாளர் - வர்த்தக ஆதரவு, கிர்லோஸ்கர் கோப்லேண்ட் லிமிடெட், raghavan@kircop.com



CFCS WILL NO LONGER BE AVAILABLE IN INDIA FROM JANUARY 2010. CFCS WILL NO LONGER BE AVAILABLE IN INDIA FROM JANUARY 2010.



# சீல் செய்யப்பட்ட சாதனத்தில் பழுதுகளைக் கண்டறிதல்


சாதாரணமாக நல்ல முறையில் தயாரிக்கப்பட்டு, தரக்கட்டுப்பாடு அளவைகளை உடைய, நன்கு இயங்கிக் கொண்டிருக்கும் ஒரு சீல் செய்யப்பட்ட சாதனமானது அதில் பழுது பார்க்காத வகையில் அல்லது வலிந்து சேதப்படுத்தாத வரையில் பழுதாகாது.

டெக்னீஷியன்கள் சாதனத்தில் என்ன குறைபாடுகள் இருக்கிறது என்பதை அறியாமலேயே அந்த சாதனத்தில் ரெப்ரிஜிரெண்டுகளை சார்ஜ் செய்கின்றனர். இதனால், இந்த ரெப்ரிஜிரெண்ட் வெளிப்படும் போது ஒசோன் படலத்தைச் சிதைப்பதோடு அல்லாமல் கேஸ், பணம் மற்றும் மனித முயற்சி ஆகியவையும் வீணாகிறது. ஒரு நல்ல நிலையிலுள்ள சாதனத்தின் அறிகுறிகள்/வெளிப்பாடுகள் என்ன என்பதையும் அந்தச் சாதனம் பழுதானபிறகு எவ்விதம் மாற்றங்கள் அதில் நிகழ்கின்றன என்பதையும் நாம் இப்போது காணலாம்.

கம்ப்ரசரின் மின்சார அல்லது மெக்கானிகல் கோளாறுகளைத் தவிர சீல் செய்யப்பட்ட சாதனத்தில் நாம் காணும் இதர பிரச்சினைகள்.

- கசிவுகள்
- அடைப்புகள்
- குறைவான சார்ஜ் இருத்தல்
- அதிகப்படியான சார்ஜ் இருத்தல்

கீழ்க்கண்ட வரைபடங்கள் சீல் செய்யப்பட்ட சாதனத்தில் உள்ள பழுதுகளை கண்டறியத் தேவையான பல்வேறு அளவைகளை ரெப்ரிஜிரேஷன் டெக்னிஷியன்களுக்கு வெளிப்படுத்தும் வகையில் அமைந்துள்ளன.





| | சாதாரணமானது | கசிவு ஏற்பட்டுள்ளது | அடைப்பு உள்ளது (முழுவதும் அல்லது பகுதியாக) | சார்ஜ் கூடுதலாக உள்ளது | சார்ஜ் குறைவாகவே உள்ளது |
|---|---|---|---|---|---|
| எவாப்பரேட்டர் | முழுவதுமாக ஃப்ராஸ்ட் செய்யப்பட்டது | ஃப்ராஸ்ட் ஏதுமில்லை | இலேசான ஃப்ராஸ்ட் அல்லது ஏதுமில்லை | அதிகமான ஃப்ராஸ்ட் | இலேசான ஃப்ராஸ்ட் |
| கம்ப்ரசர் | சூடானது (தோராயமாக 55-60°C) | குறைவான சூடு | முதலில் சூடாகவும் பின் குறைந்து போகிறது | அதிகமான சூடு | சூடானது (தோராயமாக 55-60°C) |
| டிரையர் | சிறிது வெதுவெதுப்பானது (அறை வெப்பநிலை விட 5-6°C அதிகம்) | அறை வெப்ப நிலையிலானது | அறை வெப்பநிலையிலானது | வெது வெதுப்பானது | லேசாக வெதுவெதுப்பு அறை வெப்ப நிலையில் இல்லை. |
| கேபில்லரி | லேசாக வெதுவெதுப்பானது அல்லது அறையின் வெப்ப நிலையிலானது | அறை வெப்ப நிலையிலானது | இலேசான குளிரானது அல்லது அறை நிலையிலானது | வெது வெதுப்பானது | சிறிதளவே குளிரானது அல்லது அறை வெப்ப நிலையிலானது |
| சக்ஷன் லைன் | சிறிதளவு குளிரானது (அறை வெப்ப நிலையை விட தோராயமாக 5°C குறைவு) | அறை வெப்ப நிலையிலானது | வெது வெதுப்பானது | குளிரானது அல்லது ஃப்ராஸ்ட் செய்யப்பட்டது | வெதுவெதுப்பானது (தோராயமாக அறை வெப்ப நிலைக்கு 5°C அதிகம்) |
| மின்சாரம் | சாதாரணமானது (ரேட்டட்) | இயல்பைவிட குறைவு | இயல்பைவிட குறைவு (அடைப்பு கம்ப்ரசர் டிஸ்சார்ஜில் இருந்தால் இது அதிகமாக இருக்கும்) | இயல்பைவிட அதிகம் | இயல்பைவிட குறைவு |
| குறிப்புகள் | | கசிவுகள் சாதாரண மாக இணைப்பு இடங்களில் ஏற்படும். ஆயில் அந்த கசிவு பகுதியிலிருந்து வெளிவரும் | ப்ரேசிங் சரியான முறையில் செய்யப்படாவிட்டால் சாதாரண மாக ஏற்படும் இடங்கள் கேபில்லரிகள் ப்ரேஸ் செய்யப் பட்ட பகுதிகள், கேபில்லரி இன்-லெட் முனை மற்றும் டிரையர் அவுட்லெட் ஆகியன. | இயல்பைவிட அதிகம் கம்ப்ரசர் அளவுக்கதிமாக சார்ஜ் செய்யப் பட்டுள்ளது. | இயல்பைவிட குறைவு எவாப்பரேடரின் கடைசி காயில் சரியான விதத்தில் ஃப்ராஸ்ட் செய்யப்படவில்லை |

கொடுக்கப்பட்டுள்ள பல்வேறு அறிகுறிகள் பல்வேறு காரணங்களுக்குப் பொதுவானவை. ஆகவே, மேற்கண்ட அட்டவணையானது சாதனத்தின் மோசமான செயல்பாட்டிற்கான காரணங்களை மேலுழுந்த வாரியாக நாம் கண்கூடாக பார்த்து உணரும் விதத்தில் வழங்குகிறது. தக்க சர்ஃபேஸ் ப்ரோப் உடன் கூடிய ஒரு தெர்மா மீட்டரை இந்த விதத்தில் உபயோகிப்பது நலம் பயக்கும். இதற்காக மேலும் காரணங்களைக் கண்டறிவதற்கும், சக்ஷன் மற்றும் டிஸ்சார்ஜ் ப்ரஷர்களைக் அளப்பதற்கும் ப்ரஷர் கேஜ்களை உபயோகிப்பது பரிந்துரைக்கப்படுகிறது. சீல் செய்யப்பட்ட சாதனங்களை அணுக பியர்சிங் வால்வுகள்/ப்ளையர்கள் ஆகியவற்றைப் பயன்படுத்த வேண்டும்.

**தொடர்பு கொள்ளவும் : திரு ஆஷுதோஷ் அகர்வால்,** ATS-**இந்தியா,** ats-india@indiatimes.com






**பயிற்சி அணுகுமுறைகள் மற்றும் தொடர்பு தகவல்கள்**

கீழ்க்கண்ட நிறுவனங்கள் தமிழ்நாடு, ஆந்திர பிரதேசம், கர்நாடகா, கேரளா, மஹாராஷ்டிரா, குஜராத், சண்டிகர், ராஜஸ்தான், உத்திரபிரதேசம், மத்திய பிரதேசம், கிரேட்டர் டெல்லி, மேற்கு வங்காளம், பிகார், ஒரிசா, அஸ்ஸாம் மற்றும் சத்தீஸ்கர். ஆகிய இடங்களில் பயிற்சி மையங்களின் மூலம் பயிற்சியை அளிக்கிறது.

**தென்னக மற்றும் மேற்கு மண்டல மேலாண்மை அமைப்புகள்:**

IT பவர் இந்தியா பிரைவேட் லிமிடெட், திருமதி ஸ்மிதா விசாரே, எண். 6 & 8 ரொமெய்ன் ரோலண்ட் தெரு, பாண்டிச்சேரி-605 001 தொலைபேசி : +91-413-222 7811, 234 2488, ஃபேக்ஸ் : 2340723 ஈமெயில் : nccopp@itpi.co.in இணையதளம் : www.nccopp.info

**வடக்கு மற்றும் கிழக்கு மண்டல மேலாண்மை அமைப்புகள்:**

குவெஸ்ட் கன்சல்டிங் மற்றும் ட்ரெய்னிங், திரு. V சுப்ரமணியம், E9, வசந்த் அபார்ட்மென்ட்ஸ், 100 அடி, பைபாஸ் சாலை, வேளச்சேரி, சென்னை 600 042, இந்தியா. ஃபோன் +91-44-55469764, 22591942 ஃபேக்ஸ் : 22591764 ஈமெயில்: questvs@vsnl.net

**கோத்ரெஜ் – பாய்ஸ் மேனுபாக்சரிங் கம்பெனி லிமிடெட் (அப்ளையன்ஸ் பிரிவு)**

திரு. S.A. ஜுவேகர், LBS மார்க், HO சேவை, ப்ளாண்ட் 11, பிரோஜ்ஷா நகர், மும்பை - 400 079. ஃபோன் : 022-55966603/23 ஈமெயில் : saj@godrej.com

**NCCoPP RAC சர்வீஸிங் துறையில் CFCஐ 2010க்குள் நீக்குவதற்குக் கீழ்கண்ட வழிமுறைகளில் செயல்படுகிறது:**

- CFCஐ உபயோகிக்கும் RAC சர்வீஸிங் துறை நிறுவனங்களை இலக்காகக் கொண்டிருப்பது
- CFC அடிப்படையிலான சாதனங்களில் நல்ல சர்வீஸிங் வழிமுறைகளை ஊக்குவிப்பது.
- புதிய CFC சாரா தொழில்நுட்பங்களைக் கையாள்வதற்கு சர்வீஸிங் துறைக்குப் பயிற்சியளிப்பது.


**NCCoPPயின் 2 நாள் நடைமுறைப் பயிலரங்க நிகழ்ச்சிகள் 2005-2009 வரை நடைபெற உள்ளன. இவை கீழ்கண்டவற்றை உள்ளடங்கி வழங்கப்படும்.**

- CFC மற்றும் ODC நீக்க செயலாக்க முறைகள்
- ரெட்ரோஃபிட்டிங் உட்பட புதிய HFC-134a மற்றும் HC அடிப்படையிலான ரெஃப்ரிஜிரேட்டர்கள் மற்றும் இதர வர்த்தக சாதனங்களை சர்வீஸ் செய்வது.
- CFC ரெஃபிரிஜிரென்டுகளை ரெகவர் செய்து ரீசைக்கிள் (மறுசுழற்சி) செய்வது.
- தொழில்நுட்ப மற்றும் சந்தை மாற்றங்கள் குறித்த நிலவரங்கள் மற்றும் தேவையான உபகரணங்கள்/கருவிகள்
- மொபைல் ஏர்-கண்டிஷனிங் சர்வீஸ் செய்வது குறித்த சிறந்த வழிமுறைகள்.
- திறந்தநிலை கம்ப்ரசர்களை கொண்டு ரெட்ரோஃபிட்டிங் செய்யப்படும் மிகப் பெரிய வர்த்தக சாதனங்கள் (ரெட்ரோஃபிட்டிங் உட்பட) ;
- திறந்த நிலை கம்ப்ரசர்களைப் பயன்படுத்தும் மிகப் பெரிய வர்த்தக சாதனங்களுக்கான மிகச் சிறந்த சர்வீஸிங் வழிமுறைகள் மற்றும் ரெட்ரோஃபிட் செய்வதற்கான மறுபரிசீலனை முறைகள்

*அனைத்து உள்ளூர் மற்றும் வர்த்தக சர்வீசிங் நிறுவனங்களும் பயிற்சிக்காக விண்ணப்பிக்கலாம். MAC சர்வீஸ் நிறுவனங்களுக்காக பிரத்தியேக 1 நாள் பயிற்சி அளிக்கப்படும்.*

* வரைபடத்தில் உள்ள எண்கள் தோராயமானவை, மற்றும் மார்ச் 2005 இறுதி வரை பயிற்சி பெற்ற டெக்னீஷியன்களை மட்டுமே குறிக்கிறது.

# பயிற்சி நிறுவனங்கள்




**ஆந்திர பிரதேசம்:** திரு. T. வீரேந்தர்நாத், மேகா சர்வீசஸ், 3-3-780/B, குத்பிகுடா, எசாமியா பஜார், ஐதராபாத் - 500 027. தொலைபேசி: 040-2465 3602; மொபைல்: 98492 03750 ஈமெயில்: tvnath@rediffmail.com.

**அஸ்ஸாம்:** திரு. D. தாலுக்தார், குவாலிடி கூலர்ஸ், தாஸ் காம்ப்ளக்ஸ் R.G. பருவா சாலை, குவஹாத்தி 781 024, தொலைபேசி: 0361-2202229 மொபைல்: 98640 17889 ஈமெயில்: kuwalitycoolers@rediffmail.com

**பிஹார்:** சகோ. S.G. செபாஸ்டியன் ஜோசப், தலைவர் - லயோலா இண்டஸ்டிரியல் பள்ளி, குர்ஜி, பாட்னா 800 010, தொலைபேசி: 0612-2262746 மொபைல் : 94310 21743 ஈமெயில்: logliti@sancharnet.in

**சண்டிகர்:** திரு. A. குமார், ஆனந்த் என்டர்பிரைசஸ், 5397/1 மாடர்ன் ரெசிடென்ஷியல் காம்ப்ளக்ஸ், மணிமஜ்ரா, சண்டிகர் 160 101 தொலைபேசி: 0172-2735163 மொபைல்: 94173 33569 ஈமெயில்: chandigarhozone@yahoo.co.in

**கர்நாடகா:** திரு. C.J. மேத்யூ, ட்யூ பாயிண்ட் சர்வீசஸ், 808, 10வது மெயின், முதல் ஸ்டேஜ், இந்திரா நகர், பெங்களூர் 560 038, தொலைபேசி: 080-25299325 மொபைல் : 98450 70594 ஈமெயில்: CJmathew@vsnl.com

**கேரளா:** திரு. D. சிவபிரசாத், எஸ்ஸெம் இன்ஜினியர்ஸ், 28/890 ASA சாலை, கடவன்த்ரா. கொச்சி 682 020, தொலைபேசி: 0484-2305788 மொபைல்: 94473 25455 ஈமெயில்: essemcochin@sify.com

**மத்தியபிரதேசம்:** திரு அருண் மிஷ்ரா, திவ்யான்ஷ் சர்வீசஸ், LG 6, மௌரியா சென்டர், 16, ரேஸ் கோர்ஸ் சாலை, இந்தூர் 452 008. தொலைபேசி: 0731-506 9881/ 506 9882 மொபைல்: 98931 21261 ஈமெயில்: arunmishra71@hotmail.com

**புதுதில்லி:** திரு. ஜஸ்பால் சிங், ஹிந்துஸ்தான் ரெப்ரிஜிரேஷன் ஸ்டோர்ஸ், 2, 4 & 5, நேதாஜி சுபாஷ் மார்க் தர்யாகஞ்ச், புது தில்லி - 110 002, தொலைபேசி: 011-232 71898/23259650 மொபைல்: 98100 19794. ஈமெயில்: higrpup@ndb.vsnl.net.in

**ஒரிசா:** திரு. L.N. டேஷ், B-12, B&B நகர், புவனேஸ்வர் - 751 014 தொலைபேசி: 0674-2435280 மொபைல்: 94370 82401 ஈமெயில்: indash@rediffmail.com

**ராஜஸ்தான்:** திரு. சுரேந்திர போஹ்ரா, போஹ்ரா சர்வீசஸ், 60, ஜெம் என்க்ளேவ், பிரதான் மார்க், மாளவியா நகர், ஜெய்ப்பூர் 302 017, தொலைபேசி: 0141-2522400; மொபைல் : 94140 60848 ஈமெயில் : bohra@bohraappliances.com

**தமிழ்நாடு:** திரு சபாபதி கனகா, சிவா ரெஃப்ரிஜிரேஷன், 94M/11-CMDA மணலி நியு டவுன், சென்னை 600 103, தொலைபேசி: 044-25930842 ஈமெயில்: skssaba@yahoo.co.in

**உத்திரபிரதேசம்:** திரு ராஜேஷ் M. மிஸ்ரா, இஷா என்டர்பிரைசஸ், B-1/56, சென்டார்-B, அலிகஞ்ச் லக்னோ 226 024. தொலைபேசி : 0522 - 2330578 மொபைல் : 94150 24423 ஈமெயில் : rajeshm@kircop.com

**மேற்குவங்காளம்:** திரு. நவீன் லம்பா, கிரிஸ்டல் ரெப்ரிஜிரேஷன் கம்பெனி, 7, A.J.C. போஸ் சாலை, கொல்கத்தா 700 017. தொலைபேசி : 033-22476488 மொபைல் : 98308 20848 ஈமெயில் : nl@vsnl.net

**தொழிலக பயிற்சி இணை நிறுவனங்கள்**

கிர்லோஸ்கர் கோப்லண்ட் லிமிடெட், திரு. V.G. சர்தேசாய், 1202/1, கோலே சாலை, புனே 411 005 மகாராஷ்டிரா தொலைபேசி : 020-25520802/25521860 ஈமெயில் : sardesai@kircop.com.

விர்பூல் ஆஃப் இந்தியா லிமிடெட் திரு.A. நடராஜன், 28, N.I.T., ஃபாரிதாபாத் 121 001 ஹரியானா தொலைபேசி : 0129-2231781/2441331 மொபைல் : 98100 14504 ஈமெயில் : a.natarajan@email.whirlpool.com

BOOK POST



CFCக்கள் ஜனவரி 2010 முதல்
இந்தியாவில் கிடைக்காது
என்ற காரணத்தினால்

CFCயை பயன்படுத்துவதை
விடுத்துச் சுற்றுச்சூழலுக்கேற்ற
பிற மாற்றுமுறைகளுக்கு
நீங்கள் மாறுவது சிறந்தது.


## HINDUSTAN INDUSTRIAL GASES & CHEMICALS

(a unit of Hindustan Group)
2, Netaji Subhash Marg, Daryaganj, New Delhi 110 002

*now brings you the HyChill range of Hydrocarbon refrigerants in India*

*Safe, natural and environmentally benign, the HyChill range of natural organic refrigerants are suitable for a wide range of air-conditioning and refrigeration applications. Since no retro-fitting is required, HyChill refrigerants are the perfect 'drop-in' solution for systems which previously used gases such as CFC R12, HFC R134a, HCFC R22, R502, R11 and others.*

*100% Ozone friendly, '0' per cent global warming*

*Please address your queries on applications and safety aspects to:*
*C/o. Hindustan Refrigeration Stores, Mr. V. Manoj, 2, 4 & 5 Netaji Subhash Marg, Daryaganj, New Delhi 110 002*
*Tel. 011-30127739, 2328884, 23288886, 23277725, 23277735, 23271898, 23259650 Fax 011-23271152*
*E-mail: hindustan_group@vsnl.com*


முதல் வருடப் பயிற்சி நிகழ்ச்சிகள் மார்ச் 2005 ஆம் ஆண்டு நிறைவு பெற்றது. பக்கங்கள் 5 & 6 ஆகியவற்றில் கொடுத்துள்ளது போல இந்தியா முழுவதிலும் 17 மாநிலங்கள் மற்றும் 2 யூனியன் பிரதேசங்களை இது உள்ளடக்கியது. அடுத்த கட்ட பயிற்சி நிகழ்ச்சிகள் விரைவில் துவங்க உள்ளன. ஆர்வமுள்ளோர் எங்களது இணையதளமான www.nccopp.info தளத்திலோ அல்லது அதே பக்கங்களில் வழங்கப்பட்டுள்ள ஏதேனும் ஒரு பயிற்சி இணை நிறுவனங்களிடமோ மேலும் விபரங்களைப் பெறலாம்.


**Published by NCCoPP.** For all correspondence write to: ECO-COOL™, IT Power India Pvt. Ltd., No.6 & 8, Romain Rolland Street, Pondicherry 605001. Tel: 0413-2227811 or 2342488 Email: tpm@itpi.co.in

**ECO-COOL NEWSLETTER TEAM**

Editorial direction & materials compilation: Padmini Menon, Teresa Marston & Manisha Dolia
Technical advisors: Prof. R.S. Agarwal, IIT Delhi, K. Raghavan, Kirloskar Copeland Ltd, R.S. Iyer
Produced by: IT Power India Pvt. Ltd
Illustration: Emanuele Scanziani
Layout & design: Ganesh
Translations: Shakthi Laser Graphics, Chennai
Revisions by: Maurice Shukla, Padmini Menon
Printed by: Aaral Graphics, Chennai